பக்கங்கள்:11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 02 ஞாயிற்றுக்கிழமை 18.08.2024 கதிர் 284

# பொய் வாக்குறுதிகளால் மக்களை இந்த முறையும் ஏமாற்ற முயற்சி

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு



பொய் வாக்குறுதிகளை வழங்கி இந்த முறையும் மக்களை ஏமாற்றுவதற்குத்தயாராகிவருகிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

களுத்துறை பண்டாரகமநகரில் நேற்றுஇடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் 2024 ஜனாதிபதித் தேர்தல் இரண்டாவதுவெற்றிப்பேரணியில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தெற்கில் ஜனாதிபதித் தேர்தலையொட்டி கடைசி நேரத் தாவல்கள் தடல்புடலாக நடக்கின்றன. இவர்கள் அடிக்கும் குத்துக்கரணங்களை அனுமரே பார்த்தாலும் பயந்துபோகக்கூடும்.

ஆரம்பத்தில் ஜனாதிபதிக்கு ஆதரவளித்த சொக்கோ மல்லி என அழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, தற்போது மீண்டும் மொட்டுக் கட்சிக்குத்திரும்பிநாமல்ராஜபக்சவை ஆதரிக்கிறார். மஹிந்த மற்றும் பசிலுடனான கலந்துரையாடலின் பின்னர் பிரேம்லாலின் இந்தக் குத்துக்கணரம் இடம்பெற்றது.

மொட்டுக் கட்சியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தற்போது குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களிடம் வெற்றிக்கான தெளிவான திட்டம் எதுவும்இருப்பதாகத்தெரியவில்லை, தேர்தலுக்குப் பிறகு என்ன நடக்கும் என்பதில் நிச்சயமற்ற நிலை உள்ளது. தேர்தலில் தோற்றால், வெளியேறியவர்களுக்கு பொறுப்பு இருக்காது. அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஒரு பக்கத்திலிருந்து பரப்புரைய முன்னெடுப்பதாலும், சாகல இன்னொரு பக்கத்திலிருந்து தனியான பிரச்சாரத்தை ☞ 2

## இந்து ஆலயத்தில் வழிபட்ட அனுர



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க நேற்று முற்பகல் பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டார். இந்து மதகுருமார்களை சந்தித்துப் பேசினார்.

திசாநாயக்கஜனாதிபதித்தோர்தலில் வெற்றிபெறுவதற்கானநல்லாசியினை குருமார்களிடம் பெற்றுக்கொண்டார்.

தேசியமக்கள்சக்தியின்தேசியநிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியும் உடனிருந்தார்.

## வாள் வெட்டுக்குழு சந்தேகநபர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் பொலிஸ்நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக மூன்று பேர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐந்து வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் வன்முறைக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மீட்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணமாவட்ட பிரதிப்பொலிஸ்மாஅதிபர் காளிங்கஜெயசிங்கவின் உத்தரவுக்கமையயாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப்பிரிவு ☞ 2

## நெருக்கடியால் மக்கள் துன்பப்பட்டபோது சஜித்தும் அனுரவும் எங்கேயிருந்தனர்?

### அனுராதபுரத்தில் ஜனாதிபதி கேள்வி

பொருளாதார நெருக்கடியால் மக்கள் கடுமையாகத் துன்பப்பட்டபோது சஜித் பிரேமதாசவும் அனுரகுமார திஸநாயக்கவும் எங்கிருந்தனர் என்று கேள்வி எழுப்பினார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அனுராதபுரம் சல்காது மைதானத்தில் நேற்று நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' பொதுக்கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில்நாடளாவியரீதியில் ஏற்பாடுசெய்யப்படும்தொடர் பொதுக்கூட்டத்தின்முதலாவது பேரணி அனுராதபுரத்தில் ஆரம்பமானது.பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

கட்சிகளை உடைப்பதற்காக நாம் இன்று ஒன்று கூடவில்லை. கட்சிகள் ☞ 8

## வேட்பாளர் செலவு வரையறையை தேர்தலில் அதிகரிக்கக் கோரிக்கை

வரும் ஜனாதிபதித் தேர்தலில், வாக்காளர் ஒருவருக்காகவேட்பாளர் ஒருவர்செலவிடக்கூடிய அதிகபட்ச தொகையை ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கும்படிவேட்பாளர்கள் போரியுள்ளனர்.

பிரதான வேட்பாளர்களிடம் இருந்து இந்தக் கோரிக்கை கிடைத்திருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஆணைக்குழு இறுதி முடிவைஎடுத்துஅதனை வர்த்தமானி மூலம் அறிவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் செலவு ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, வேட்புமனுக்கள் பெறப்பட்ட 5 நாட்களுக்குள்ஒருவாக்காளருக்குச் செலவிடப்படும் அங்கீகரிக்கப்பட்டதொகைவர்த்தமானியில் வெளியிடப்படவேண்டும்.

அது குறித்து முடிவெடுப்பதற்காக வேட்பாளர்களுக்கும்தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் இடையில் வெள்ளிக்கிழமைதேர்தல்கள் ஆணைக்குழு வளாகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே ☞ 8

## கர்தினாலைச் சந்தித்து ஆசி பெற்றார் அனுர



இலங்கையின் பேராயர்கர்தினால்மல்க்கம் ரஞ்சித்தை நேற்று பொரளையில் உள்ள பேராயர் இல்லத்தில் சந்தித்துப் பேசினார் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ☞ 8

## மருந்து, உணவு மிதான வற் வரியை நீக்குவோம்

### முதல் வரவு செலவுத் திட்டத்திலேயே என்கிறார் அனுர

தேசிய மக்கள் சக்தியின்ஆட்சிஅமைந்தால் தமது முதலாவது வரவு செலவுத்திட்டத்திலேயே மருந்துகள், பாடசாலை பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களுக்கான வற் வரி நீக்கப்படும் என்று ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமாரதிஸாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

தங்காலையில்நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் முதலாவது பரப்புரைப்பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய ☞ 8

## தன்னை ஜனாதிபதியாக்கிய ராஜபக்சக்களின் கட்சியையே இன்று நாசமாக்கியவர் ரணில்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் காட்டம்



தம் மீதுள்ள ஊழல், மோசடிக் குற்றங்களிலிருந்து தப்பிக்கொள்ளவே ராஜபக்ச குடும்பத்தினர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆக்கினார்கள். ஆனால் இறுதியில் ரணில் பொதுஜன பெரமுன கட்சியையும் நாசமாக்கி விட்டார். இப்போது கட்சியைக் காப்பாற்றதன் மகனைக் களத்தில் இறக்கியுள்ளார் மகிந்த. அவருக்கு வேறு எந்தத் தெரிவும் கிடையாது.

இவ்வாறு தெரிவித்தார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம். களுத்துறைபண்டாரகம நகரில்நேற்றுஇடம்பெற்ற 2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டாவது தேர்தல் பேரணியில் கலந்துக் கொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரகலய போராட்டத்தின் பின்னர் ராஜபசக்கள் ரணில் விக்கிரமசிங்கவைநாட்டின் ☞ 8

## சந்தியில் இன்று தேர்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின வருடாந்தத் தேர்த் திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின்வருடாந்தப் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நடத்துவதாலும்உள்ளகத்திட்டங்கள் தெளிவற்றதாகவே உள்ளன.

பிரேமலால் ஜயசேகரல இதனைப் புரிந்துகொண்டிருந்தார் ஆனால் பசிலுக்கு இந்த விடயம் ஆரம்பத்திலேயே தெரியும். ஜனாதிபதியுடனான பல சுற்றுப் பேச்சுக்களின்போது இது நடந்தது. இந்தக்கலந்துரையாடல்களின்போது, 25க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்துடன் இணைத்துக்கொள்ள தாம் செயற்பட்டு வருகிறார் என்று ஜனாதிபதி பசிலிடம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டியிருந்தார். றிசாத்தும் ஹக்கீமும் ஆளும்தரப்புடன் இணைந்து கொள்கின்றனர். தமிழ் அரசுக் கட்சியும் தமக்கு ஆதரவளிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். ஆனால் இரண்டு மூன்று சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் ஜனாதிபதியால் எதுவும் செய்ய முடியாது என்பதை பசில் உணர்ந்தார்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வெற்றிபெற முடியாது என்பதையும் பசில் நன்கு புரிந்து வைத்திருந்தார். இதன் காரணமாகவே ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதைவிட மொட்டுவில் இருந்து தனி வேட்பாளரை நிறுத்த பசில்தீர்மானித்தார். ஆனால்இதைப் புரிந்துகொள்ள முடியாத மொட்டுக் கட்சியில் உள்ள சில பெரியவர்கள் ஜனாதிபதிக்குஆதரவளித்துகட்சியை விட்டு வெளியேறினர்.

ஜனாதிபதி பக்கம் மட்டுமல்ல எதிர்க்கட்சிப் பக்கமும்கூட மொட்டுக் கட்சியினர் சிதறி ஓடுகின்றனர். பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணாதாச கொடித்துவக்கு அந்த வகையில் கடைசியாகக் கட்சி தாவியவர். ஜனாதிபதி வேட்பாளர் சஜித்பிரேமதாசவுக்குதனது ஆதரவு வழங்க தீர்மானித்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

இதன் பிரகாரம், நேற்று மாத்தறை அகுரெஸ்ஸ நகரில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதிப்படுத்தும் விதமாக நடைபெற்றமூன்றாவதுபேரணியில் கருணாதாச கொடித்துவக்கு கலந்துகொண்டு தனது ஆதரவை வெளிப்படுத்தினார்.

இந்தக் கட்சித் தாவல்கள் இப்போதைக்கு நிற்காது இன்னும் இரு வாரங்களுக்குத் தொடரும் என்கிறார்கள்விசயம்தெரிந்தவர்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொய் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இதில், ஐக்கிய மக்கள் கூட்டணியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள்போலவேஅப்பகுதியை சேர்ந்த பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர்.

சஜித் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இன்று பல தரப்பினர் ஒன்றிணைந்துள்ளனர்,வைன் ஸ்டோர்ஸ், மதுபான அனுமதிப் பத்திரம் போன்ற வரப்பிரசாதங்களுக்கு அவர்களை பலியெடுத்துள்ளனர். நான் ஜனாதிபதியான பின்னர் அவ்வாறு மோசடியாகவும் இலஞ்சமாகவும் வழங்கப்பட்ட அனைத்துஅனுமதிப்பத்திரங்களையும் இரத்து செய்வேன்.

அரசியல் இலஞ்சத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் சட்டத்தின் முன் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான தவறுகளை செய்யாமல் சிந்தித்துசெயல்படுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

எவரேனும் ஒருவர் கொள்கை திட்டத்துடனும் வழிகாட்டல்களுடனும் அரசியல் பயணங்களை முன்னெடுக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியுடனும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்புடனும் இணைந்து கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் பணத்துக்காகவும் ஊழலுக்காகவும் மோசடி களுக்காகவும் இணையவில்லை. சிறந்த கொள்கை திட்டத்துடன் இணைந்து கொண்டிருக்கின்றனர. இந்த ஊழல் மிக்க திருட்டுத்தனமான அரசியலை நிறுத்த வேண்டும் .

தனி மனிதன் திருந்தாமல் நாட்டை திருத்த முடியாது என்று பஞயாசிக தேரர் குறிப்பிட்டாலும், இன்றுநாட்டில்ஜனாதிபதி உள்ளிட்ட ஆட்சியாளர்களும் அவர்களின் சகாக்கள் கூட்டமும் ஒன்றாக இணைந்து கொண்டு சுகபோக வாழ்க்கையைவளப்படுத்துவதற்காக செயல்படுகிறார்கள்.

220 இலட்சம் மக்களின் முன்னேற்றமே ஐக்கிய மக்கள் சக்தி அபிவிருத்தி என்பதாக காண்கின்றது. அபிவிருத்திஎன்றுதொகைகளை காண்பித்து பயனில்லை. அபிவிருத்தியை ஒவ்வொரு குடிமகனும் உணர வேண்டும். அதன் பிரதி பலனை அனுபவிக்க வேண்டும் .

இன்று சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தில் உள்ளவர்கள் மாத்திரமேஅனுபவிக்கின்றனர். ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மாத்திரமே அனைத்து சுகபோகங்களை அனுபவிக்கின்றனர்.

220 இலட்சம் மக்களும் அநாதைகளாக கைவிடப்பட்டிருக்கின்றனர். தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகளை வழங்கி இந்த முறையும் மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதன் பின்னரும் மக்கள் ஏமாறுவதற்கு தயாராக இல்லை.

இந்த நாட்டில் இருக்கின்ற பிரச்சினைகளுக்குதீர்வுகாண்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயார். பொருளாதார வீழ்ச்சி பொருளாதாரக் கொலைகள் ஊடாக நாட்டை சீரழித்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் நாட்டை கட்டியெழுப்புவதற்கும் அபிவிருத்தியின்தளிர்களைபெற்றுத் தருவதற்கும் தாம் தயார்.

அதேபோன்று நாட்டை மேலும் வலுப்படுத்துவதற்காக தாம் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறேன். எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு 'பிரபஞ்சம்' 'மூச்சு' திட்டங்கள் ஆகியவற்றின் ஊடாக மக்களுக்கு சேவை செய்ததைப் போன்று, ஆட்சியைப் பெற்றுக் கொண்ட பின்னரும் மக்களுக்காக சேவை செய்வேன். இவை அனைத்தும் அரசாங்க பணத்தில் இருந்து செய்யப்படவில்லை. நன்கொடைகள், உதவிகள் என்பனவற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. இந்த நாட்டை கட்டி எழுப்புவதென்றால் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். பிரபஞ்சம், மூச்சு போன்ற வேலை திட்டங்களின் ஊடாக ஊழல் மோசடி திருட்டு என்பன இடம் பெறவில்லை என்பதால் பெருந்தொகையானவர்கள் இதற்கு உதவிகளை வழங்க தயாராக இருந்தனர் .

அரகலயபோராட்டத்தின்பின்னர் அரசியல்வாதிகளின் மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். ஆனாலும், எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி மக்களுக்கு பாரிய சேவைகளை செய்திருக்கிறது. மத்திய வங்கியை சுயாதீன கட்டமைப்பாக மாற்றுவதற்கு இலஞ்ச ஊழல் சட்டமூலத்தைவிட புதிய சட்டமூலம் ஒன்றை கொண்டுவந்தேன். ஊழலை தடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி பாரிய வேலை திட்டங்களை முன்னெடுத்து இருக்கிறது.

இந்த நாட்டுக்கு வெட்டிப் பேச்சுக்கள் அவசியம் இல்லை. காட்சிப்படுத்தல் அவசியமில்லை. அபிவிருத்தி தான் தேவை. சொல்வதைச் செய்வதை நடைமுறையில் ஒப்புவித்துள்ளேன். அபிவிருத்தி யுகத்தை உருவாக்கி, நவீன தொழில்நுட்பத்துடன் அனைத்து துறைகளையும் முன்னேற்றம் அடையசெய்து, புதிய தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கி, உற்பத்தியின் கொள்ளளவை அதிகரிக்கச் செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

## சந்தியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகிநடைபெற்றுவருகின்றது. இதில், நேற்று இரவு சப்பரத் திருவிழா நடைபெற்றது. இன்று தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. நாளை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், மாலை 6. 30 மணிக்கு மௌனத் திருவிழாவுடன் வருடாந்தப் பெருந்திருவிழா நிறைவுறும்.

இதேநேரம், தேர், தீர்த்தத் திருவிழாக்களையொட்டி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள், சுகாதார, குடிதண்ணீர் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நாட்களில் சந்நிதியான் ஆலயத்துக்கு அண்மையாகவுள்ள 20 மடங்களில் அன்னதானமும் நடைபெறும்.

## வாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த 6 பேர் வன்முறையில்ஈடுபட்டனர். இதனால் மூன்று இலட்சம் வரையான பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டது. இரண்டு மோட்டார் சைக்கிள்களில் அவர்க்ள அறுவரும் வந்திருந்தனர்.

சம்பவம் தொடர்பாக 19 மற்றும் 23 வயதான கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 2 பேரும் அச்சுவேலியைச்சேர்ந்தஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ்விசாரணையின்போது துபாயில் இருந்து வீட்டை தாக்க உத்தரவு கிடைத்ததாகவும் அதற்கமையகூலிப்படையாககுறித்த வன்முறையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூரான் மஞ்சம் நாளுமே இன்பம்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண். ஆஸ்திரேலியா

**மஞ்சத்தில் ஏறி மால்மருகன் வருகிறான்
வாருங்கள் முருகன் வடிவழகை காண
சஞ்சல மகற்றி சாந்தியை அளித்திடுவான்
சகலரும் வாருங்கள் சரவணனைத் தரிசிப்போம்**

**நெஞ்சமதில் இருக்கும் அத்தனையும் சொல்லுங்கள்
நிம்மதியை நீள்சுகத்தை நல்லூரான் தந்திடுவான்
வந்தவினை அகலும் வருவினைகள் ஓடிவிடும்
செந்திருவாம் கந்தனைத் தரிசிப்போம் வாருங்கள்**

**பேராசை என்னும் பேய் பிடிக்காதிருக்க
பிறர் வருந்தும் காரியங்கள் ஆற்றாதிருக்க
காவலனாய் கந்தா நீயிருக்க வேண்டும்
கைகூப்பிக் கேட்கின்றோம் காத்திடுவாய் கந்தா**

**அரக்க மனமுடையாரைத் திருத்திவிடு கந்தா
அறவழியில் செல்ல ஆக்கிவிடு கந்தா
இரக்கமுடை மனத்தை இருத்திவிடு கந்தா
இவ்வுலகில் என்றும் துணைநீயே கந்தா**

**செருக்குடைய அசுரரை திருந்திடவே வைத்தாய்
சித்தமதை தெளிவாக ஆக்கிவிடு கந்தா
உருக்கமுடன் உனைவேண்டி நிற்கின்ற அடியார்
உளமகிழச் செய்திடுவாய் உமைபாலா கந்தா**

**நல்லூரான் மஞ்சம் நாளுமே இன்பம்
எல்லையில்லா கருணை கந்தனது மஞ்சம்
அழகுடனே கந்தன் அமர்ந்துவரும் காட்சி
ஆனந்தம் ஆனந்தம் அளவில்லா ஆனந்தம்**

வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தின்
நல்லூர் உற்சவகால
பணிமனையில் பகுதிநேர
வேலைவாய்ப்புகள்!

பல்கலைக்கழக
மாணவர்களுக்கு
முன்னுரிமை.



தொடர்புகளுக்கு: 0777 920 384

- GOODGIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD
- LONG LIFE CARE (PVT) LTD
- GREEN MEDIA HOUSE (PVT) LTD
- SEMBA SERVICES (PVT) LTD

காலைக்கதிர்
Kalaikkathir

# பிரபாகரனை முதலில் நானே படம்பிடித்தேன் அவர் கடுமையாகச் சீற்றமடைந்துள்ளார்

## இந்தியா டுடேயின் சிரேஸ்ட ஊடகவியலாளர் ராஜ் செங்கப்பா



விடுதலைப்புலிகள்இயக்கத்தின்தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரனை முதன்முதலில் படம்பிடித்தது தான் என இந்தியா டுடே குழுமத்தின் ஆசிரியபீட இயக்குநர் ராஜ் செங்கப்பா கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய ஊடக நட்புறவு சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

இலங்கைக்கு 15 வருடங்களின் பின்னர் மீண்டும் வந்துள்ளேன் . இறுதியாக 2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தேன். அந்த ஆண்டு இலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையான ஆண்டு.

தற்போது தேர்தலை எதிர்நோக்கியுள்ள இலங்கை வரலாற்றின் முக்கியமான கட்டத்தில் உள்ளது.

இந்தியாவிற்கு இந்த வருட தேர்தல் எவ்வாறு முக்கியமானதாக அமைந்ததோ அதேபோன்று இலங்கைக்கும் இந்த வருட தேர்தல் தீர்க்கமானதாக அமையலாம்.

வேலுப்பிள்ளை பிரபாகரனை முதலில் படம்பிடித்தவன் நான், நானே அவரின் முகத்தை உலகிற்கு முதலில் தெரியப்படுத்தினேன்

1982ம் ஆண்டு மெட்ராசில் ஒரு துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தகவல் வந்தது. அவர்கள் யார் என்பது அவ்வேளை எனக்கு தெரியாது.

அந்த துப்பாக்கிசூட்டு சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் கைதுசெய்யப்பட்டு




சிறையிலடைக்கப்பட்டிருந்தார்.

அவரை அதுவரை எவரும் பார்த்ததில்லை . அவரது புகைப்படங்கள் எதுவும் அதுவரை இருக்கவில்லை. இலங்கை யின் புலனாய்வாளர்களிடம் கூட அவரின் புகைப் படம் இருக்கவில்லை. அவரை கைவிலங்குடன் நான் படமெடுத்தேன்.

நான் அவரை படமெடுத்தவேளை அவரின் முகத்தில் தெரிந்த சீற்றத்தை போல சீற்றத்தை வேறு எவரின் முகத்திலும்



நான் பார்க்கவில்லை.

கடும் சீற்றம் கோபம் அவரது முகத்தில் தென்பட்டது. நான் அச்சத்தில் கமராவை கீழே போட்டேன். இலங்கை புலனாய்வு பிரிவினர் அந்த படத்தை பெறுவதற்காக கடும் முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

அதன்பின்னர் மண்டபம் அகதிமுகாமிற்கு வரும் அகதிகள் மீனவர்கள் விவகாரம் குறித்து செய்தி சேகரித்திருக்கின்றேன்.

இம்முறை இந்திய தேர்தலில் தேவையில்லாமல் கச்சதீவு விவகாரம் பயன்படுத்தப்பட்டது. மீண்டும் நான் இலங்கை வந்தவேளை பிரபாகன் ஓயாத அலைகள் என்ற நடவடிக்கையை முன்னெடுத்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் ஜெயசிக்குறு நடவடிக்கையை முறியடிப்பதற்கான நடவடிக்கை அது. முல்லைத்தீவில் யுத்தம் இடம்பெற்றது.

அவ்வேளை ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தவேளை சந்திரிகா குமாரதுங்க சமாதானத்திற்கான யுத்தத்தை நடத்துவதாக கூறினார் ஆனால் அவரால் சமாதானத்தை ஏற்படுத்த முடியவில்லை யுத்தத்தில் வெற்றிபெற முடியவில்லை என விமர்சித்தார்.

அதன்பின்னர் கிளிநொச்சியில் இடம்பெற்ற பிரபாகரனின் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டேன்.

பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்ற செய்தி வெளியானதும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு சரத்பொன்சேகா உட்பட முக்கியமானவர்கள் சந்தித்தேன். பிரபாகரனின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதில் மர்மங்கள் சந்தேகங்கள் உள்ளன.(05)

# ஒருகோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான கஜ முத்துக்களுடன் மூவர் கைதாகினார்கள்



ஒரு கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று கஜ முத்துக்களுடன் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை விமானப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவனல்லை மற்றும் புத்தளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

(05)

# கேரள கஞ்சா வைத்திருந்த ஒருவர் கொழும்பில் கைது

கொழும்பு, முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரஜமல்வத்தை பகுதியில் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு, ஒருகொடவத்தை பிரதேசத்தை சேர்ந்த 41 வயதுடைய நபராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 05 கிலோ கிராம் 500 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# வரலாற்று சிறப்புமிக்க ஜயஸ்ரீமஹா போதியை தரிசித்து ஆசிபெற்றார் ஜனாதிபதி ரணில்







ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று (சனிக்கிழமை) காலை அனுராதபுரம் வரலாற்று சிறப்புமிக்க ஜய ஸ்ரீமகா போதியை தரிசித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அநுராதபுரத்தின் வரலாற்று சிறப்புமிக்க புனித தலத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி முதலில் வண, பல்லேகம ஹேமரதன நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்ததுடன் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மத வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

அநுராதபுரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க லங்கா ராம விகாரையின் விகாராதிபதி வண, ரலப னாவே தம்ம ஜோதி நாயக்க தேரர் விசேட அனுசாசனை உரை நிகழ்த்தியதுடன்,இந்த நாட்டின்புத்தசாசனத்தைப்பாதுகாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிகள், நிச்சயமாக அவரின் எதிர்கால வெற்றிகளுக்கு வழி வகுக்கும் என சுட்டிக்காட்டினார்.



இதேவேளை, வரலாற்று சிறப்புமிக்கஜயஸ்ரீமஹாபோதியை தரிசிக்க வருகை தந்திருந்த மக்கள் மத்தியில் சென்ற ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, கஞ்சன விஜேசேகர, பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, லசந்த அழகியவன்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, துமிந்த திஸாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன, சம்பத் அத்துகோரள எச்.சி.முத்துகுமாரன, வடமத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பானஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகருமானசாகலரத்நாயக்க, முன்னாள் அமைச்சர்களான மனுஷநாணயக்கார, பீ.ஹெரிசன், முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.(05)

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேர்தல் உணர்த்தும் பாடம்

நாய் வேடம் போட்டால் குலைத்துத்தான் ஆகவேண்டும்என்பதுசரியாகத்தான் இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தமது சர்வஜன அதிகாரக் கூட்டணியின் வேட்பாளராக திலித் ஜயவீரவை நிறுத்தியிருக்கும் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்பன்பிலபோன்ற இனவாதிகள்யாழ்ப்பாணத்திற்கு வந்து மதத் தலைவர்களைச் சந்திப்பதையும் இந்துக் கோயில்களில் வழிபடுவதையும் பார்க்கும்போது வாக்குகளுக்காக எந்தளவிற்கும் இறங்குவதற்கு அரசியல்வாதிகள் தயாராகவே இருக்கின்றார்கள் என்பது தெளிவாகவே தெரிகின்றது.

அரசுத் தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகள் தெற்கில் சூடுபிடித்திருக்கும் தருணத்தில் சர்வஜன அதிகாரக் கூட்டணியினர் மட்டும் தமது முதல் பரப்புரைக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தொடங்கினார்கள். அதற்கு முன்னதாக அவர்கள் இந்து, கிறிஸ்தவ, பௌத்த மதத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். நல்லூர் ஆலயத்திற்கும் சென்று வழிபட்டார்கள். உதய கம்பன்பில, விமல் வீரவன்ஸபோன்றவர்கள்தமிழர்பாரம்பரியப்படிவேட்டி அணிந்து, மேலாடை களைந்து ஆலயத்திற்குள் சென்று வழிபட்டார்கள்.

இது சிங்களவர்களின் நாடு இங்கு சிங்களவர்களுக்கு மட்டுமே முதன்மை இடம் என்று இனவாதம் கக்குகின்ற இவர்கள், வாக்குகளுக்காக தமிழர்கள் முன்பு வேடமிடுவதைப் பார்க்கின்றபோது ஒவ்வொரு வருடமும் தேர்தல் வந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகின்றது.

தென்னிலங்கையின் பெரும் பணக்காரர்களில் ஒருவரும் ஊடக முதலாளியுமான திலித் ஜயவீர கடந்த அரசுத் தலைவர் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவை ஆதரித்த ஒருவர். அவரது ஊடகப் பலம் கோட்டாபயவின் வெற்றிக்கான முக்கிய காரணம் என்று கணிக்கப்பட்டது. அவரே இந்தத் தடவை சர்வஜன அதிகாரக் கூட்டணியின் சார்பில் அரசுத் தலைவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கின்றார். அரசியலுக்குவருவதாகஅவர்தீர்மானித்த உடனேயே ஒரு கட்சியை விலைக்கு வாங்கிக்கொண்டார். அதேசமயம், இனவாதிகளான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்பன்பில போன்றவர்கள் இந்தமுறை அரசியல் அணி சேரப் போக்கிடம் அற்றவர்களாக மாறிவிட்டனர். அரசுத் தலைவர் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளும் மிக முக்கியம் என்கிற நிலையில் வேறு எந்தவொரு கூட்டணியிலும் இவர்களைச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

இந்த நிலையில்தான் தமக்குள் ஒரு கூட்டணியை அமைத்துக்கொண்டுஅதன்சார்பில்திலித்ஜயவீரவை அரசுத் தலைவர் வேட்பாளராக நிறுத்தினார்கள். அதாவது இனவாதத்தின் வேட்பாளராகத்தான் அவரை முதன்மைப்படுத்துகிறார்கள். கடந்த தடவை கோட்டாபய ராஜபக்ச அறுவடை செய்த இனவாத வாக்குகளைக் கவர்வதுதான் இவர்களின் நோக்கம். அப்படியிருந்தும்தேர்தல்களநிலவரங்கள்அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து வேட்டி கட்டி வேடமணிய வைத்திருப்பதைப் பார்க்கும்போதும், அரசியல்வாதிகள் வாக்குகளுக்காக எதையும் செய்வார்கள்என்பதையும்அவர்களுக்குகொள்கைப் பற்று எதுவுமில்லை என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.



# தலைமுறை இடைவெளி

**கதிரவன்**

வயது முதிர்ந்தவர்களுக்கும் வயதில் இளையவர்களுக்கும், இடையே கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் ஏற்படுவதைப் பார்த்திருக்கிறோம். தலைமுறை இடைவெளி என்ற சொல்லாடல் நம்மிடையே அதிகம் பயன்பாட்டில் இருப்பதையும் பார்க்கிறோம். ஒரே குடும்பத்தில் உள்ள வெவ்வேறு வயதினர், ஒரு விஷயம் குறித்து நேரெதிர் கருத்துக்கள் கொண்டிருப்பதையும், அதற்கு



காரணம்வயதுவித்தியாசம்என்றுகூறப்படுவதையும் நாம் உணர்கிறோம்.

பொருட்களின்உபயோகம்சார்ந்ததாகமட்டுமின்றி, வாழ்வின் முக்கிய அங்கங்களான, திருமணம், சுமுக உறவு, போன்றவற்றிலும் இப்பிரச்சினை தலை தூக்குவதைப் பார்க்கலாம்.

தலைமுறை இடைவெளி என்பது என்ன, எப்படி ஏற்படுகிறது? வயதில் மூத்தவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் கோட்பாடுகளுக்கும், வயதில் இளையோர் போக்கிற்கும் இடைவெளி ஏற்பட்டு அது நாளுக்கு நாள் அகன்று வருவதாகக் கருதுவதை, தலைமுறை இடைவெளி என்பர். இவ்விரண்டு தலைமுறையினரும் ஒருவரை ஒருவர் சரிவர புரிந்து கொள்ளாமையும் கருத்துப் பரிமாற்றம் இல்லாமையும் இதற்கு காரணம் என மனநல மருத்துவர்கள், சமூகவியல் விற்பன்னர்களும் கூறுகின்றனர்.

உடை, கேளிக்கைகள், உணவு விஷயங்கள், பாலியல் பற்றிய பேச்சுக்கள் மற்றும் செயல்பாடுகள் இந்த தலைமுறை வேறுபாட்டின் சில முக்கிய அம்சங்களாகும்.

குடும்பத் சூழல், தோழமை சார்ந்த கூட்டத்தின் தாக்கம், ஆகியவற்றால் இந்த இடைவெளி விரிவடையும் வாய்ப்புகள் உள்ளது.

குடும்பத்தில்பெற்றோர்மற்றும்பிள்ளைகளிடையே பிணக்கு ஏற்படுதல், வீண் செலவுகள் அதிகரித்தல்,சேமிப்பு குரல், சில விஷயங்கள் மறுசாராரிடம் இருந்து மறைக்கப்படுத்தல், அதன் மூலமாக மன உளைச்சல் போன்றவை அதிகரித்தல் – இவை தலைமுறை இடைவெளி ஏற்படுத்தும் சிக்கல்களில் சில.

கண்ணாடிக் கோப்பையைக் அதிகமாக அழுத்திப் பிடிக்கவும்கூடாது, வெகு அலட்சியமாகவும்கையாளக் கூடாது என்பர். இளைய தலைமுறையினருக்கு அது பொருந்தும். ஏராளமானசுதந்திரமும்அளவுக்கதிகமான கட்டுப்பாடுகளும் எதிர்வினைகளைத் தரும்.

நேற்றைய தினம் போலவே இன்றும் நாளையும் விளங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட முதியவர்களுக்கும், காலம் க்ஷணத்துக்கு க்ஷணம் மாறிக்கொண்டிருக்கிறது என்று எண்ணம் கொண்ட இளைய தலைமுறைக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகள் இடைவெளியை அதிகப்படுத்தும்.

இவ்விரு சாராருக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றம் - ஒருவர் நிலையிலிருந்து அடுத்தவர் கோணத்தில் பிரச்னையைப் பார்க்கும் பழக்கம் ஆகியவை ,இடைவெளியைக் குறைக்க உதவும்.

தலைமுறை இடைவெளி என்பது ஒவ்வொரு தலைமுறையிலும் நிலவி வந்தாலும், தொழில்நுட்ப வளர்ச்சி உலகத்தைச் சுருக்கி ஒரு பெரிய கிராமமாக மாற்றிய பின்னர், அதிகரித்து வருவது கண்கூடு.

குடும்பங்கள் மட்டுமல்ல, பெரு நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் இதனால் தாக்கத்தை சந்திக்கின்றன; ஒரு தலைமுறையினர் தேர்ந்தெடுத்த - விரும்பி வாங்கிய ஒரு பொருள் அடுத்த தலைமுறையினர் பார்வை மாறுபடுவதால், பழைய வாடிக்கையாளர்களை தக்க வைப்பது, புதிய வாடிக்கையாளர்களை வாங்க வைப்பது ஒரு கலையாகவும் சவாலாகவும் விளங்குகிறது.

கல்லூரி அல்லது பள்ளிக்கூடங்களில் கல்வி சார்ந்த பார்வை, கற்றல், கற்பித்தல் ஆகியவற்றில் ஏற்படும் மாறுபாடுகளுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்வதும் மாணவர்களை மாற்றுவதும் மூத்த ஆசிரியர்களுக்குப் பெரும் சவாலான ஒன்று.

வாழ்க்கை எனும் அளவில், இளைஞரிடையே

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# தலைமுறை இடைவெளி

4ம் பக்க தொடர்ச்சி...........



இன்று நிலவும் காதல், 'ரிலேஷன்ஷிப்', 'பிரேக்அப்', திருமணம் தாண்டிய சேர்ந்து வாழ்தல், விவாக ரத்து, மறுமணம், தனித்து வாழ்தல் போன்றவை சட்ட ரீதியாக நியாயப்படுத்தப்பட்டாலும், அவை சார்ந்த சிந்தனையில் வெவ்வேறு தலைமுறையினரிடம் உள்ள இடைவெளி புதிய சவால்.

தலைமுறை மாற்றம் ஒவ்வொரு பதினான்கு ஆண்டுகளுக்கும் ஏற்படும் என்று சொல்லப்பட்ட காலம் உண்டு. தற்போது ஐந்தே ஆண்டுகளில் ஏற்படுவதாகக் கூறப்படுவது மலைப்பாக உள்ளது.

கால மாற்றம், வளர்ச்சி, கல்வி, பயணங்கள் ஏற்படுத்தும் தாக்கம் போன்ற நிதர்சனங்களும் யதார்த்தங்களும் ஏற்றுக்கொள்ளப் பட வேண்டும். சரியான புரிதல், அனுசரணை, விட்டுக்கொடுத்தல், கலந்துரையாடல் போன்றவை தலைமுறை இடைவெளியை ஓரளவேனும் குறைக்கும், அல்லது அவரவரது சொகுசு வளையத்தில் நிம்மதியாக இருக்க உதவும்.

ஆனால், எது எப்படியானாலும், ஒரு சில விஷயங்கள் மாறாத தன்மை உடையன; விழுமியம் சார்ந்த, அறம் சார்ந்த விஷயங்களில் யாதொரு சமரசமும் இருத்தல் கூடாது. இது குறித்த புரிதலை ஏற்படுத்துவது ஊடகங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றின் சமூகக் கடமையாகும்.

# மங்களவின் சகோதரி மகள் சங்சல சஜித் பிரேமதாஸவிற்கே ஆதரவு

## மாத்தறை மாவட்ட அமைப்பாளராகவும் அவர் நியமனம்





இந்நாட்டின் மிகவும் அனுபவம் வாய்ந்த, சிரேஷ்ட மற்றும் நன்மதிப்பு மிக்க அரசியல்வாதிகளில் ஒருவரான மறைந்தமுன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் சகோதரியின் மகளான திருமதி சஞ்சல குணவர்தன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

மங்கள சமரவீரவின் மரணத்தின் பின்னர் அவரது குடும்பத்தில் இருந்து அரசியலுக்கு பிரவேசித்த முதல் நபராக சஞ்சல குணவர்தனவை குறிப்பிடலாம்.

இவ்வாறு அவர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டதன் பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளராக நியமித்தார்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee
Chikne Fried Rice with
Vegetable
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் டெங்கு நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு



நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 34 ஆயிரத்து 906 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14,248 ஆகும்.

அதன்படி, கொழும்பு மாவட்டத்திலிருந்து 8,452 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் 16 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதனால், பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(05)

# திருமலை வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி இல்லை

## பொது மக்களுக்குச் சிரமம்



திருகோணமலை வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி இன்மையால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடமையில் இருந்த சட்ட வைத்திய அதிகாரி மேற்படிப்பிற்காக வெளிநாடு ஒன்றிற்கு சென்றுள்ள நிலையில் இம்மாதத்தின் ஆரம்பத்தில் இருந்து முக்கியமான பிரேத பரிசோதனைகளை திருகோணமலை வைத்தியசாலையில் செய்ய முடியாதுள்ளது.

குறிப்பாக சந்தேகத்திற்கிடமான மரணங்களுக்குரிய பிரேத பரிசோதனையை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையை அண்மித்துள்ள ஏனைய மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், பல மடங்கு பணவிரையம் ஏற்படுவதோடு காலதாமதமும் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் மாத்திரமே இருப்பதாகவும் அவரும் சுகவீனமுற்றவராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்ட பொது வைத்திய சாலையானது 11 பிரதேசசெயலாளர் பிரிவிலும் உள்ள மக்களது மேலதிக சிகிச்சைகளுக்காக மாத்திரமன்றி பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காகவும் பங்காற்றி வருகின்றது. இந்நிலையில், சட்ட வைத்திய அதிகாரி ஒருவருடைய தேவையும் திடீர் மரண விசாரணை அதிகாரி பற்றாக்குறையும் தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

எனவே பொது மக்கள் தங்களுக்கான சிறந்த சேவையினை பெற்றுக் கொள்ளும் முகமாக திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# கடும் காற்றில் அள்ளுண்டுபோன கடைத் தொகுதிகளின் கூரைகள்

## புத்தளத்தில் சம்பவம்

புத்தளம் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு வீசிய பலத்த காற்றினால் புத்தளம் நகரின் சில கட்டடங்களின் கூரைகள் காற்றினால் அள்ளுண்டுச் சென்றுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் வெள்ளி இரவு வீசிய பலத்த காற்றால் புத்தளம் நகரசபை சந்தைக் கடைத் தொகுதியின் கூரைத் தகடுகள் அள்ளுண்டு சென்றுள்ளன.

அத்துடன் கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த மண்டபத்தின் கூரைகள் மற்றும் புத்தளம் நூலகத்தின் கூரைகள் ஆகியன காற்றால் அள்ளுண்டு சென்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.(05)

# சட்டவிரோத மதுபானம், கோடாவுடன் ஹங்வெல்லயில் இருவர் கைதாகினர்

ஹங்வெல்ல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட களுஅக்கல பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

ஹங்வெல்ல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 44 மற்றும் 53 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து 101 லீற்றர் 250 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் 1,080 லீற்றர் (6 பெரல்கள்) கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஹங்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## மருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர், மதுபான உற்பத்தியாளர்கள் போன்ற வர்த்தகர்கள் செலுத்த தவறிய வரியை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை எளிமைப்படுத்தப்பட்ட வரி முறை அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

'மருந்துகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் மீதான வற்வரியை நீக்குவோம். பாடசாலைப் பொருட்கள் மற்றும் புத்தகங்கள் மீதான வாட் நீக்கப்படும். அதே நேரத்தில் உணவுப் பொருட்களுக்கான வற் வரியை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். எமது ஆட்சியின் கீழ் முதல் வரவுசெலவுத் திட்டத்தில் இருந்தே இதைச் செய்வோம். அரசு,' என்றார் அவர்.

அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ள ஒரு நாட்டை தேசிய மக்கள் சக்தி கையகப்படுத்த வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியுடன் நாட்டை மீட்கும் என்றும் திஸாநாயக்க கூறினார்.

தேசிய மக்கள் சக்தியையும் யாரையும் பழிவாங்கப்போவதில்லை என்றும், எனினும், தவறு செய்பவர்கள் மற்றும் மோசடி மற்றும் ஊழலுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மோசடி, ஊழலை ஒழிப்போம், திருடப்பட்ட சொத்துக்களை கையகப்படுத்துவோம் என்றார்.

## வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்காளர் ஒருவருக்காகச் செலவிடப்படும் தொகையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்காக ஒவ்வொரு வேட்பாளரும் செலவிட்ட தொகை தொடர்பான அறிக்கையை ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த 20 நாட்களுக்குள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வழங்குப்பட வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் உள்ள விடயங்கள் ஆணைக்குழு எதிர்பார்த்தது போன்று நடக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக ஒரு வேட்பாளருக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உரிய நிறுவனத்திற்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

இதற்கிடையே, தேர்தல் காலத்தில் நன்கொடைகள் என்கிற பெயரில் வாக்காளர்களுக்கு லஞ்சம் வழங்கப்படுகின்றது என்று பவ்ரல் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டின் ஆட்சியாளரைத் தெரிவு செய்யும் வாக்குகள் விற்கக்கூடிய ஒன்றாக இருக்கக்கூடாது என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

வாக்காளர்கள் நுகர்வோராக மாறுவதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கர்தினாலைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி வேட்பாளருமாகிய அனு ரகுமார திஸநாயக்க.

நாட்டில் நிலைமை, அரசியல் நிலவரம் தொடர்பில் அருட்தந்தையர்களுடன் கலந்துரையாடிய அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கான ஆசியை அவர்களிடம் பெற்றுக்கொண்டார்.

இந்த சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத் இணைந்துகொண்டார்.

## தன்னை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். எவ்வாறாயினும் சர்வதேச ரீதியில் எழுப்பப்படும் குறைகளை மற்றும் தவறுகளைத் தவிர்ப்பதற்காக 'நாட்டின் தலைமைப் பொறுப்பை சஜித் பிரேமதாசவுக்கு பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் சஜித் பிரேமதாச அழைப்பை ஏற்று நாட்டைப் பொறுப்பெடுக்கவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க இன்றும் கூறுகிறார்.

ஆனால் அன்று ராஜபக்ஷர்களை முயற்சிசெய்தது, நாட்டின் பொறுப்பை சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைத்து, சஜித் பிரேமதாசவை நாசமாக்கவே ஆகும். அதுபற்றி நாங்கள் நன்றாகவே அறிந்திருந்தோம். 'இந்தத் தருணத்தில் நாட்டின் தலைமைப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம்' என நாங்கள் கூறினோம்.

ஜே.ஆர் ஜயவர்தன அனைத்து நீதிபதிகளையும் வீட்டிற்கு அனுப்பினார். ரணில் விக்கிரமசிங்க இன்று நீதிபதிகள் வழங்கும் தீர்ப்புகளை மீறிச் செயற்படுகிறார். சட்டத்தரணிகளுக்கும் நீதிமன்றங்களுக்கும் இடையே சண்டையை உண்டுபண்ணவே ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபரை தேர்ந்தெடுத்தது பாதுகாப்பு அமைச்சின் தேவையின் நிமித்தமே ஆகும். தேசபந்து தென்னக்கோனைத் தேர்ந்தெடுத்தது ஆளும்தரப்பின் செயலற்ற அரசியலை கொண்டு செல்வதற்கே ஆகும். ஆனால் அவையனைத்தும் இன்று தோல்வியடைந்துள்ளன. ஆகவே ஜனாதிபதி பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை உடனடியாக நியமிக்கவேண்டும்.

அதேபோல், நாடெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் இன்று ஐக்கிய மக்கள் சக்தியுடனும் ஐக்கிய மக்கள் கூட்டணியுடனும் ஒன்றிணைந்துள்ளனர். அதேபோல் இந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு பாரியதொரு வெற்றியைப் பெற்றிகொடுக்க அனைவரும் ஒன்றுசேரவேண்டும் என்றார்.

## நெருக்கடியால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுகூடி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வந்துள்ளோம். எம்மை ஆசீர்வதிக்கவே மழையும் பெய்தது. அதனால் கட்சி பேதமின்றி சுயாதீனமாக சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகிறேன்.

மற்றைய தலைவர்கள் ஓடிப்போன வேளையில், முடியும் என்று நாட்டை மீட்க வந்தவர்கள் எம்மோடு உள்ளனர். அதனால் எனது அணியில் அனைவரும் ஒன்றுபட்டு முன்னோக்கிச் சென்று எதிர்காலத்தைப் பாதுகாப்போம். என்னுடையதோ பிரதமருடையதோ எதிர்காலம் இங்கு பாதுகாக்கப்படாது.

கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. அன்று நாட்டில் மின்சாரம் இருக்கவில்லை, இருளில் இருந்தோம். எரிபொருள் இருக்கவில்லை, நடந்து சென்றோம். காஸ் இருக்கவில்லை, சிலிண்டர் மட்டுமே இருந்தது, அதையும் விற்றோம். மருந்து இருக்கவில்லை, மக்கள் வீதிகளில் உயிரிழந்தனர். ஹோட்டல்கள் மூடப்பட்டன, தொழிற்சாலைகள் முடங்கின. அப்போது நானும் பிரதமரும் மட்டுமே நாட்டை ஏற்க முன்வந்தோம்.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினர். எதிர்கட்சித் தலைவர் ஓடிவிட்டார். அனுரவைத் தேடவே முடியவில்லை. டொலரின் பெறுமதி 370 ரூபாயாக உயர்ந்தது. கேஸ் சிலிண்டர் ரூ.4900 வரை அதிகரித்தது. பெற்றோல் ஒக்டேன்-92 இன் விலை ரூ.470 வரையில் அதிகரித்தது. ஒடோ டீசல் ரூ.460 வரையில் அதிகரித்தது. மண்ணெண்ணெய் விலை ரூ.460 வரையில் அதிகரித்தது. பஸ் கட்டணமும் மின் கட்டணமும் அதிகரித்தன. மக்கள் கடுமையாகத் துன்பப்பட்டனர். அப்போது சஜித்தும், அனுரவும் எங்கு இருந்தனர்?

மக்கள் கஷ்டம் புரிந்திருந்தால் ஆட்சியை ஏற்றிருக்க வேண்டும். எதிர்கட்சி எந்த வேளையிலும் ஆளும்தரப்பைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இரண்டாம் எதிர்கட்சி ஏற்கவேண்டும். அவர்கள் எங்கு இருந்தனர்? காஸ் சிலிண்டர் விலை ரூ.4900 இற்கு கூடியபோது அனுர, சஜித் எங்கு இருந்தனர்? இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும்.

இன்று அனுராதபுரத்தில் ஆரம்பித்து சஜித், அனுரவிடம் இந்தக் கேள்விகளை எல்லா மேடைகளிலும் கேட்பேன். பதில் இருந்தால் கூறுங்கள், இல்லாவிட்டால் எனது மேடையில் இரு பக்கங்களில் வந்து அமருங்கள்.

அன்று உயர்வடைந்த சிலிண்டர் விலை இன்று குறைந்துள்ளது. அதனால் சிலிண்டர் சின்னத்தை ஏற்றுக்கொண்டேன். பெற்றோல் டீசல் விலைகளையும் குறைத்துள்ளோம். பஸ் கட்டணமும் மின் கட்டணமும் குறைந்துள்ளன. இதனால் மட்டும் திருப்தியடைய முடியாது. இது ஆரம்பம் மட்டுமே. இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. நாட்டில் உரம் இருக்கவேயில்லை. இந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சஜித்தோ அனுரவோ ஹர்ஷவோ ஹந்துன்னெத்தியோ அன்று முன்வரவில்லை. நான் உரம் பெற்றுத் தந்தேன், நீங்கள் விளைச்சலைத் தந்தீர்கள், நாம் வெற்றி கொண்டோம்!

இதற்கு மக்களுக்கு நன்றி! நான் இந்த நாட்டை கட்டியெழுப்புவேன். வற் வரி அதிகரிக்கப்பட்டபோது மக்கள் பட்ட கஷ்டங்களை நான் அறிவேன். கஷ்டப்பட்ட அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கினோம். அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 55 ஆயிரம் வரையில் அதிகரித்தோம். வங்குரோத்து நாட்டிலேயே அதனைச் செய்தோம்.

அஸ்வெசும வழங்கினோம், சமுர்த்தி போன்று மூன்று மடங்கு வழங் கினோம். சிரேஷ்ட பிரஜைகளுக்கு நிவாரணம் வழங்கினோம். அங்கவீனமுற்றோருக்கு நிவாரணம் வழங்கினோம். ஜனாதிபதி நிதியத்தில் புலமைப்பரிசில் வழங்கினோம். உறுமய திட்டத்தில் காணி உறுதிகள் வழங்கினோம். தற்காலிகமான உறுமய திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலுக்குப் பின்னர் தனி அதிகார சபையின் கீழ் இரு வருடங்களில் இந்தத் திட்டத்தை நடத்தி முடிப்போம், அதற்கான சட்டமும் கொண்டு வரப்படும். கொழும்பில் வீட்டு உரிமைகளை மக்களுக்கு வழங்குகிறோம். தோட்டப் பகுதிகளை கிராமங்களாக பிரகடனப்படுத்த முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

உரிமைகளைப் பகிர்வதே புரட்சியாகும். 18 நாடுகள் எமக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக உதவிகளை வழங்கின. நாம் முன்னேற்றத்தை எட்டினால் சர்வதேச நாணய நிதியம் 13 பில்லியன் டொலர் நிவாரணம் வழங்குவதாகக் கூறியுள்ளது. எனவே அதற்கான வேலைத்திட்டத்தை தொடர வேண்டும். அனுரவும் சஜித்தும் அதனை மாற்றுவதாகக் கூறுகிறார்கள். அதனை மாற்றிவிட்டு மீண்டும் அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்து மின்சாரம் இன்றி இருக்க வேண்டுமா? இல்லாவிட்டால் அப்படியான பிரச்சினைகள் வரும்போது அதனைத் தீர்மானிக்க முடியாமல் ஓடிவிடுவார்களா?

நான்கு வருடங்கள் தொழில் கிடைக்காத இளையோருக்கு தொழில் வழங்கும் திட்டமும் எம்மிடம் உள்ளது. அதற்காக விவசாய நவீனமயப்படுத்தல் திட்டம் ஆரம்பிக்கப்படும், தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும். ஜே.ஆர். ஜயவர்தன காலத்தில் கலாசார முக்கோணத்தை அமைத்து தம்புள்ளை, சீகிரிய பகுதிகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தினோம். அதேபோல் அனுராதபுரத்தை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம். அனுராதபுரத்தை பௌத்த மத்தியஸ்தானமாக மாற்றியமைக்க எதிர்பார்க்கிறோம். அதற்காக மகா விகாரை பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படும்.

நாம் முன்னேறிச் செல்வோம். உங்கள் எதிர்காலத்தை எம்மிடம் விட்டுவிடுங்கள், சிலிண்டருக்கு வாக்களியுங்கள் - என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்ததாவது:

அனுராதபுரம் மக்கள் ஆழமாகத் தீர்மானித்தே வாக்களித்துள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் ஆட்சி வழங்கப்பட்டபோது நீண்ட காலம் பயணிக்க முடியாதென எதிர்கட்சிகள் கூறின. ஆனால் நாம் இன்றைய நிலைமை வரையில் கொண்டு வந்திருக்கிறோம்.

நாட்டில் பொருளாதார நிலைத்தன்மை அவசியம். நாட்டில் அராஜக முறையில் அரசியல் செய்ய முடியாது. அகிம்சை வழியில் சென்று வெற்றி கொள்ள முடியும் என்பதை ஜனாதிபதி நிரூபித்துள்ளார். அரச தலைவர் ஒருவரிடம் நாடு கையளிக்கப்படும்போது அவருக்கு நாட்டை நிர்வகிக்கும் இயலுமை இருக்க வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது அனுபவங்களைக் கொண்டு நாட்டைப் பொறுப்பேற்று முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தி நம்பிக்கையை வழங்கியுள்ளார். கிராமங்களிலுள்ள இளையோரின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான திட்டத்தையும் ஜனாதிபதி தயார்படுத்தியுள்ளார்.

அதனால் ஜனாபதி வழங்கிய தலைமைத்துவத்தை தொடர்ந்தும் பாதுகாத்தால் அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியும் - என்று பிரதமர் தெரிவித்தார்.

நீதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அங்கு தெரிவித்ததாவது:

கொவிட், உக்ரேன் போர் காரணமாக எம்மால் எதிர்பார்த்த பொருளாதார இலக்குகளை அடைய முடியவில்லை. பெரும் சரிவைச் சந்தித்தோம். 69 இலட்சம் பேருடைய எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனது.

பல மணித்தியால மின்வெட்டு. 2022 ஏப்ரல் 4ஆம் திகதி எவரும் நிதியமைச்சை ஏற்காத வேலையில் நான் ஏற்றுக்கொண்டேன். அப்போது அனைத்துக் கட்சிகளும் எமக்கு ஒத்துழைக்க வேண்டுமெனக் கோரினோம்.

நான் நிதியமைச்சராக இருந்தபோது, அப்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சிகளுக்கு நாட்டை ஏற்க அழைப்பு விடுத்தார். நான் சஜித்துடன் பேசியபோது அவர் ஹர்ஷாவுடன் பேசுமாறு கூறினார். அவர் மத்திய வங்கி ஆளுநரையும் நிதியமைச்சின் செயலாரையும் அனுப்புமாறு கூறினார். அதனையும் செய்தோம். எதிர்கட்சித் தலைமையகத்தில் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக அவர்களுக்கு விளக்கமளித்த பின்பு, நாட்டின் நிலைமை மோசமாக உள்ளதெனக் கூறிவிட்டு ஒதுங்கிவிட்டனர். அவர்கள் ஏற்க மறுத்த நாட்டைதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்று இந்த நிலைக்குக்கொண்டுவந்திருக்கிறார்.

அதனால் அந்த நிலையிலிருந்து மீட்டெடுத்த தலைவருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. நாம் ஒருபோதும் ஐக்கிய தேசிய கட்சியின் மேடையில் ஏறியதில்லை. தற்போது நாட்டின் நலன் கருதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கிறோம்.

நாடு நெருக்கடியிலிருந்தபோது பொருளாதாரத்தை மீட்க முன்வராதவர்கள் இப்போது வருவதில் என்ன பலன் இருக்கிறது? நாட்டின் தேசிய பாதுகாப்பு என்பது நிலப் பாதுகாப்பு மாத்திரம் அல்ல. தேசியப் பொருளாதாரம் சரிந்தால் முழு நாடும் சரிந்துவிடும். எனவே லெபனான், வெனிசுலா போன்ற நிலைக்கு இலங்கை செல்லாதிருக்கப் பாடுபட்ட ஜனாதிபதிக்கு நாம் நன்றிக்கடன் செலுத்த வேண்டும் -என்றார்.







காலைக்கதிர் Kalaikkathir

## சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 13 பிரதேசத்தை சேர்ந்த 49 வயதுடைய நபராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 6,000 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலதிக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## ஐஸ் போதைப்பொருளுடன் கல்முனையில் ஒருவர் கைது

அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கலாவெள, விஜிதபுர பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய நபராவார்.

சந்தேக நபரிடமிருந்து 100 கிராம் மற்றும் 250 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

## யானையை சுட்டு கொன்ற 3 பொலிஸார் கைதாகினர்

தம்புள்ளை - பக்கமூன பிரதான வீதியில் காட்டு யானையை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பக்கமூன பொலிஸ் நிலைத்தை சேர்ந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களே கைது செய்யப்பட் டுள்ளனர்.

பக்கமூன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் முச்சக்கரவண்டியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது அவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காட்டு யானை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)




காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணத்தில் வயிற்றுக்குற்று காரணமாக வைத்தியசாலையில் சேக்கப்பட்ட நபர் இறப்பு

வயிற்றுக்குற்று காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆணொருவர் சிகிச்சை பலனின்றி 15ஆம் திகதி வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார். புன்னாலை கட்டுவன் தெற்கு பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

இவர் கடந்த 14ஆம் திகதி வயிற்றுக் குற்று காரணமாக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் வியாழக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

கிருமித் தொற்று காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

# போலி நாணயத்தாள்களைக் கொண்டு நகைகளை வாங்க முயன்றவர் கைது

இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள நகை கடை ஒன்றில் போலி நாணயத்தாள்களை பயன்படுத்தி நகைகளை வாங்க செய்ய முயன்றதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் வெள்;ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள நகை கடை ஒன்றில் சந்தேகநபர் தங்க மாலை ஒன்றை வாங்க சென்றுள்ளார்.

இதன்போது, நகைகடையின் பணியாளர் சந்தேக நபர் கொடுத்த பணத்தை சோதனையிட்ட போது அந்த பணம் போலியானது என தெரியவந்துள்ளது.

பின்னர், நகை கடையின் பணியாளர் இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 5,000 ரூபா போலி நாணயத்தாள்கள் 102 கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கன்றை வயிற்றில் சுமந்திருந்த மாடு மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

வாகல்கட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலிவெள பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாகல்கட பொலிஸார் தெரிவித்தனர்.

கெபிதிகொல்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய திருமணமான நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது வீதியின் குறுக்கே கன்றை வயிற்றில் சுமந்திருந்த மாடு ஒன்று மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, கன்றை வயிற்றில் சுமந்திருந்த மாடும் மோட்டார் சைக்கிள் செலுத்துனரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகல்கட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வெள்ளவத்தையில் முதலாளியால் தாக்கப்பட்டு தொழிலாளி கொலை

கொழும்பு , வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் முதலாளியால் தாக்கப்பட்டு தொழிலாளி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கொலை செய்யப்பட்டவர் விற்பனை நிலையம் ஒன்றில் தொழிலாளியாக கடமையாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், இந்த விற்பனை நிலையத்தின் முதலாளிக்கும் கொலை செய்யப்பட்டவருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவரது சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சந்தேக நபரான 42 வயதுடைய விற்பனை நிலையத்தின் முதலாளி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வீட்டில் தூங்கியபடியிருந்த 5 வயதுச் சிறுவன் கடத்தல்:

## கடத்தியவரை மடக்கிப் பிடித்தபொதுமக்கள்

வீடொன்றில் தூங்கிக்கொண்டிருந்த 5 வயது சிறுவனை கடத்தல்காரர் ஒருவர் கடத்தி, காட்டுக்குள் கொண்டு சென்றதையடுத்து, சிறுவனை மீட்டு, கடத்திய நபரை பிரதேச மக்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதனால் அப்பகுதியில் இன்று பெரும் பரபரப்பான சூழ்நிலை நிலவுவதாகவும் கைதான நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 5 வயது சிறுவன் தாய், தந்தையுடன் உறங்கிக்கொண்டிருந்தபோது, நேற்று அதிகாலை 3.30 மணியளவில் சிறுவன் பால் கேட்க, சிறுவனின் தாயார் தந்தைக்கு பக்கத்தில் சிறுவனை விட்டுவிட்டு சமையலறைக்குச் சென்றுள்ளார்.

பின்னர், பால் போத்துலுடன் திரும்பி வந்து பார்த்தபோது சிறுவனை காணாத நிலையில், அப்பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு சிறுவனை தேடியுள்ளனர்.

இதன்போது சிறுவனை கடத்திக்கொண்டு நபரொருவர் காட்டுப் பகுதிக்கு செல்வதை கண்ட மக்கள் காட்டை சுற்றி தேடியுள்ளனர்.

இந்நிலையில், சிறுவனை காட்டில் விட்டுவிட்டு சந்தேக நபர் அந்த பகுதியில் ஒளிந்திருந்தபோது, அவரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து அடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன் சிறுவனை மீட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர் வாழைச்சேனை செம்மண்ஓடை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர்; போதைப்பொருளுக்கு அடிமையானவர்; ஏற்கெனவே பல திருட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர்; பதிவு செய்யப்பட்ட குற்றவாளிப் பட்டியலில் (ஜ.ஆர்.சி) சேர்க்கப்பட்டவர் எனவும் போதைப்பொருள் வாங்க பணத்துக்காக சிறுவனை கடத்தி பணம்பறிக்க முயற்சித்துள்ளார் எனவும் சந்தேக நபர் தொடர்பான பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.(05)

# அம்பாறையில் பெருமளவு ஐஸ் போதைப் பொருள் மீட்பு

30 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருள்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய நீண்ட நாள்களாக ஐஸ் போதைப்பொருள்களை விநியோகம் செய்து வந்த சந்தேக நபர்கள் கல்முனை மாநகரில் உள்ள உல்லாச விடுதி ஒன்றில் வைத்து வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பகுதியில் இருந்து கல்முனைக்கு நீண்ட காலமாக குறித்த போதைப்பொருள்கள் கடத்தி வரப்பட்டுள்ளதுடன், 36 வயது மற்றும் 49 வயது மதிக்கத்தக்க கல்முனை அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் ஆடம்பர உல்லாச விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

குறித்த போதைப்பொருள்கள் பொலித்தீன் பைகளில் உறையிடப்பட்டு மிக சூட்சுமமாக கடத்தி வரப்பட்டுள்ள நிலையில் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு சந்தேக நபர்கள் மற்றும் சான்றுப்பொருள்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் ஒப்படைக்கவுள்ளனர்.

தற்போது கைதான சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கல்முனை விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன், அம்பாறை மாவட்ட வரலாற்றில் மீட்கப்பட்ட பெருமளவிலான ஐஸ் போதைப்பொருள்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(05)

# சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் கீழே விழுந்து இறப்பு

## யாழ்ப்பாணம் சம்பவம்

சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் கீழே விழுந்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். சாந்தை - பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

கடந்த 11ஆம் திகதி குறித்த பெண் பொன்னாலை கிருஷ்ணன் கோவிலுக்குச் சென்றுள்ளார். பின்னர் தனது சகோதரனுடன் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த வேளை மாதகல் - பொன்னாலை வீதியில் குறித்த பெண் தவறி திடீரென கீழே விழுந்து மயக்கம் அடைந்துள்ளார்.

இந்நிலையில் சங்கானை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(05)

# தேர்தல் சட்டங்களை பின்பற்றி பரப்புரைகளை மேற்கொள்ளுக

## அனைத்து வேட்பாளர்களிடமும் பெப்ரல் வேண்டுகோள்




தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம் செயற்படுத்தப்படுவதால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் சட்ட திட்டங்களை பின்பற்றி கௌரவமான முறையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். தேர்தல் செலவு சட்டத்தை மீறி செயற்பட்டால் மூன்று வருடங்களுக்குள் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாமல் போகும் என பெப்ரல் அமைப்பினர் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

பெப்ரல் அமைப்பு வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்கள் எந்தவகையிலும் வன்முறை சம்பவங்கள் ஏற்படாத வகையில் தங்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அதேபோன்று சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் பிரசார நடவடிக்கைகளில் இருந்து தவிர்ந்துகொள்ளுமாறும் வாக்காளர்களை பணத்துக்கு வாங்குவதற்கு முயற்சிக்க வேண்டாம் எனவும் அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், இந்த தேர் தலில் முதற்தடவையாக தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் வேட்பாளர்களின் செலவு வரையறுக்கப்படும் சட்டத்துக்கு அமைவாக வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் செலவுகளை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த சட்டத்தை மீறி செயற்படும் வேட்பாளர்களின் பதவி இல்லாமல் போகும் நிலை இருக்கிறது.

அதேநேரம் யாராவது ஒரு வேட்பாளர் தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டத்தை மீறி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் குறித்த வேட்பாளருக்கு மூன்று வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலிலும் வேட்பாளராக இருக்க முடியாமல் நிலை இருக்கிறது. அதனால் தேர்தல் சட்ட திட்டங்களை பின்பற்றி கௌரவமான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேட்பாளர்களை அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். - என்றார்.

# ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை

## மதத் தலைவர்களையும் சந்தித்தார்





ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர யாழ்ப்பாணத்துக்கு விஜயம் - மத தலைவர்களையும் சந்தித்தார். சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர நேற்று (சனிக்கிழமை) யாழ்ப்பாணத்தில் சர்வமத தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

நாகவிகாரை, யாழ்ப்பாணம் ஆயர் இல்லம்,ஜும்மாபள்ளிவாசல்,நல்லைஆதீனம், நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றுக்கு திலித் ஜயவீர சென்றுள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவனஸ மற்றும் உதய





கம்பன்பில, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா ஜகம்பத் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மௌபிம ஜனதா கட்சியின் தலைவரான திலித் ஜயவீர எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நட்சத்திர சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இந்த கட்சியின் அங்குரார்ப்பண முதலாவது பொதுக்கூட்டம் சேற்று பகல் திலித் ஜயவீர தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2024இல் வெளியிடப்பெற்றது